அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் :93/2017

தேதி : 15/09/2017

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம், பயணப்படிகள், வாடகைப் படிகள், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு படிகளும், சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி என்பது பிற வேலை வாய்ப்புகளைப்போன்றது அல்ல. பொதுமக்கள் சேவை என்பது மட்டுமே இப்பதவிக்கான குறிக்கோளும் தகுதியும் ஆகும். ஜனநாயக அடிப்படையில் அரசியல், அரசியல் சார்ந்த தேர்தல், தேர்தல் மூலம் வெற்றி, வெற்றி மூலம் கிடைத்த பதவியைக் கொண்டு ஆற்றவேண்டிய கடமை என்பதே இப்பதவிக்கான நடைமுறை. எனவே வருவாய் என்பதைத்தாண்டிய சேவை மனப்பாங்கும், தியாக உணர்வும், நிரந்தர பண்புகளாக இந்த உறுப்பினர்களிடம் இருக்கவேண்டும் என்பதும் மரபு.

ஆனால் தங்களது நேரம் மற்றும் உழைப்பை இவர்கள் தருவதால் அதற்கு ஈடாக பல்வேறு படிகளும், சலுகைகளும், ஓய்வூதியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. பிற துறைகளைப் போன்று குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை அனைத்தும் அதிகரிக்கப்பட்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரம் அடைந்து சில ஆண்டுகள் வரை தியாக உணர்வோடும் சேவை மனப்பாங்கோடும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் திறம்பட பணியாற்றிவந்தார்கள். கடந்த 50 ஆண்டுகளில் இச்சேவை மனப்பான்மை குறைந்து, பதவி ஆசைகளும் பெருகிவிட்டன என்பது யதார்த்தமான உண்மை.

இருப்பினும், மக்கள் தொண்டையும், தியாக உணர்வையும், மனதில் கொண்டு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தொண்டாற்றக்கூடிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் சேவை செய்து வருகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக பணிபுரியும் காலத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியமும், படிகளும், பிற சலுகைகளும் பிற துறைகளில் பணியற்றுபவர்களோடு ஒப்பிடுகையில் ஓரளவு நியாயமானதாகவே அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பதவிக்காலத்தின் போதும், பதவியில் இருந்து முடிந்த பிறகும் அவர்களுக்கு கிடைக்கும் மரியாதைக்கும், புகழுக்கும் அளவே இல்லை.


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

சாதாரண மக்கள் உபயோகப்படுத்தும் எரிவாயு சிலிண்டர்களுக்கான மானியத்தை விட்டுக்கொடுக்கச் சொல்லி பாரத பிரதமர் வேண்டுகோள் விடுத்தபோது லட்சக்கணக்கான பொதுமக்கள் விட்டுக்கொடுத்து அதன் மூலம் அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் மிச்சப்பட்டது என்பதை முன்னுதாரணமாக கொண்டு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஓய்வூதியத்தை விட்டுக்கொடுப்பதன் மூலம், மத்திய, மாநில அரசுகளுக்கு தொடர் செலவினங்கள் குறையும் வாய்ப்பு உள்ளது.

இப்படி மீதமாகும் தொகையிலிருந்து ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மத்திய, மாநில அரசுகள் செய்ய முடியும். பொதுமக்களுக்கும், ஓய்வூதியத்தை விட்டுக்கொடுத்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீது மதிப்பும், மரியாதையும் மேலும் அதிகரிக்கும்.

இப்படி சொல்வதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எனக்கு வரும் ஓய்வூதியத்தையும், சட்டமன்ற உறுப்பினராக இருந்ததால் கிடைக்கும் ஓய்வூதியத்தையும், வேண்டாம் என்று சொல்வீர்களா என்று கேட்டால், அதற்கு நான் முழுமனதோடு சம்மதம் தெரிவிக்கிறேன் என்பதோடு மட்டுமல்லாமல் எழுத்துபூர்வமாக உறுதியளிக்கவும் தயார் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவருக்கும் முன்னுதாரணமாக எனக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை நிறுத்த வேண்டுகோள் விடுத்து நாடாளுமன்ற செயலாளருக்கும், தமிழக சட்டப்பேரவை செயலாளருக்கும் இன்றே கடிதம் எழுத இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com